14.3.25 தினமணி Page-No. 4.

# அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு விழா

கோவை, மார்ச் 13: கோவை அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தில் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

மாணவியர் நல புல முதன்மையர் ந.வாசுகி தலைமை வகித்தார். மாவட்ட இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு அலுவலர் ச.புவனேஸ்வரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர், விளையாட்டு தின விழாவுக்கான கொடியை ஏற்றிவைத்தும் விளையாட்டு தின தீபத்தினை ஏற்றிவைத்தும் விழாவை தொடங்கிவைத்தார்.

அதைத் தொடர்ந்து 950 மாணவிகள் பங்கேற்ற அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார். விழாவில், மாணவிகளின் சிலம்பம், கம்பு நடனம், சேலையைக் கொண்டு நிகழ்த்தும் நடனம், கூர்நுனிக்கோபுரம் போன்ற விளையாட்டுகள் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து மாநில, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் பரிசளித்துப் பாராட்டினார். நிகழ்ச்சியில், விளையாட்டுத் துறை இயக்குநர் ப.நந்தினி, துறைத் தலைவர் ப.வனிதாமணி, இணைப் பேராசிரியர் சரவணபிரபா, த.சண்முகவள்ளி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.